**நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டம்- மேலதிக நிதியத்தின் - 2023**

---

நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டம் - மேலதிக நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் மீள் கட்டமைப்பிற்கான சர்வதேச அபிவிருத்திச் சங்கம் மற்றும் ஆசிய அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திட்ட 2021 செப்தெம்பர் 04 ஆந் திகதிய 9255 - எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் பட்டோலை 2, பிரிவு I (பீ) மற்றும் செயற்திட்ட கைநூலின் 07 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசச் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் மற்றும் பொருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் குழாயிடப்பட்ட தண்ணீர் சேவைகளிற்கும் முன்னேற்றப்பட்ட சுகாதாரத்திற்ம் அணுகுவழிகளை அதிகரித்தலும் ஒன்றிணைந்த நிறுவனங்களின் இயலளவை வலுப்படுத்துவதும் செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. மேலதிக நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 12,823 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 42.74 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 12,000 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 40 மில்லியன் மீள்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் (IBRD) நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது மேலதிக நிதியளிப்பு உடன்படிக்கையின் கீழான அதன் நடவடிக்கைகளை 2021 செப்தெம்பர் 04 இல் தொடங்கியிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டதுடன் 2025 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 2 ஆம் அத்தியாயத்தின் 2.3 ஆம் பிரிவு | அரசாங்க கொள்வனவு வருகை கம்பஹா மாவட்டத்தில் சுத்திகரிப்பு பொறியின் நிர்மாண வேலைகள் தொடர்பில் தேசிய கொள்வனவு முகவராண்மையிடமிருந்து கொள்வனவுக் குழு நியமிப்பதற்கான தேவைக்கு முன்னர் சமூக தாக்க மதிப்பீடு, சுற்றாடல் தாக்க மதிப்பீடு, போன்ற சாத்திய வள கற்கை உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், சுத்திகரிப்பு பொறியின் நிர்மாண வேலைகள் மத்திய சுற்றாடல் அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதி பெறாமை மற்றும் பொது மக்கள் எதிர்ப்பால் நிறுத்தப்பட்டது. எவ்வாறாயினும், கைவிடப்பட்ட திகதி வரை செய்யப்பட்ட வேலைகளிற்காக ரூபா 40.2 மில்லியன் தொகையை ஒப்பந்தகாரர் பெறப்பட்டிருந்தது. ஆகவே, செயற் திட்டத்திற்காக ஏற்பட்ட கிரயம் சிக்கனமற்றதாக இருந்தது. | 40.2 | வரைவு சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்ததுடன் இறுதி அறிக்கையை முன்னேற்றுவதற்கான தெவையாக அதன் கருத்துரைகளை உலக வங்கி செய்திருந்தது. மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் (CEA) வேண்டப்பட்டவாறு, சகல ஆவணங்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் அனுமதி பெறுவதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும், மேற்குறித்த கம்பஹா மாவட்ட ஒருங்கிணைப்பு குழு உத்தேசிக்கப்பட்ட செயற்திட்டத்திற்காக அனுமதியை வழங்கியிருந்தது. பின்னர், தேசிய வீடமைப்பு அதிகாரசபை றம்பொக்குநகம வீடமைப்பு திட்டத்தின் கழிவகற்றல் பகுதிக்குள் 2 ஏக்கர் பரப்பளவுள்ள காணி ஒதுக்கியிருந்தது. | கொள்வனவு தொடங்கவதற்கு முன்னர் வழிகாட்டல் பிரகாரம், சகல தெளிவுபடுத்தல்களும் உறுதிப்படுத்த வேண்டியதுடன் சிக்கனமற்ற வழியில் செயற்திட்ட நிதிகளை பயன்படுத்தவதற்கு கவனயீனமாக வேலை செய்யும் உத்தியோகத்தர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றல்

### 3.1 செயற்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்

| கணக்காய்வு அவதானிப்பு | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| பன்னிரண்டு செயற்திட்டங்களின் ரூபா 2,830 மில்லியன் பெறுமதியான நிதி முன்னேற்றம் இடைகால கொடுப்பனவு சமர்ப்பித்தல் மற்றும அனுமதியில் தாமதம் மற்றும் ஒப்பந்தகாரரால் கோரப்பட்ட முரண்கட்டளை காரணமாக பௌதீக முன்னேற்றத்தை தாமதமான விட குறைவாக இருந்தது. | 2,830.37 | கருத்துரைகளை உடன்படுகின்றோம், எவ்வாறாயினும், 20 சதவீத முற்பண கொடுப்பனவு நிதி முன்னேற்றத்தில் உள்ளடக்கப்படவில்லை. ஆகவே, செலுத்தப்பட்ட முற்பணத் தொகை நிதி முன்னேற்றத்திற்கு உள்ளடக்கப்பட வேண்டும். | முற்பணம் கொடுப்பனவிற்கான அனுமதி பெறும் வரை செலவினமாக எடுக்க முடியாததுடன் சம்பந்தப்பட்ட முன்றணப்பகுதியை குறைக்கும். ஆகவே, சான்றுபடுத்திய வேலைகளிற்கான கொடுப்பனவு நடைமுறை முற்பணப்படுத்த வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | பதின் மூன்று செயற்திட்டங்கள் தொடர்பில் செயற்திட்ட காலப்பகுதியின் முறையற்ற திட்டமில் காரணமாக 17 நாட்கள் முதல் 244 நாட்கள் வரையிலான கருத்திற் கொள்ளக்கூடிய தாமதங்கள் அவதானிக்கப்பட்டது. | வேலைத் தள பகுதி பாரிய இடி முழக்க மழையால் பாதகமான காலநிலை மற்றும் குழாயிடல் வேலைகள் நெல் அறுவடை பூர்த்தியாக்கும் வரை நிறுத்தி வைக்கப்பட்டமை என்பன காரணமான தாமதம் நிலவியது. பொதுவாக, சில பகுதிகள் உதரிபாராமல் ஆண்டில் 2- 3 மாதங்கள் வரை நீரில் மூழ்கியிருக்கும். | செயற்திட்ட வேலைகள் சுற்றாடல் மற்றும் ஏனைய தாக்க மதிப்பீகளின் பின்னர் திட்டமிடப்பட வேண்டும். அசாதாரண செயற்திட்ட தாமதத்தை தவிர்ப்பதற்கு முகாமைத்துவம் செயற்திட்ட வேலைகளை கண்காணிக்க வேண்டும். |
| (ஆ) | கோணாவில் நீர் வழங்கல் செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் மற்றும் நிதி முன்னேற்றம் 2023 திசெம்பர் 31 இல் எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் திகதி வரையும் முறையே 47 சதவீதம் மற்றும் 25.94 சதவீதமாக இருந்தது. 2023 ஒக்தோபர் 05 செய்யப்பட்ட பௌதீக மெய்மையாய்வு திகதியில் 110 மிமீ PVC குழாய்கள் கிடைக்காமையால் 69 கிலோ மீற்றரில் 12.23 கிலோமீற்றர் மாத்திரமே பூர்த்தியாக்கப் பட்டிருந்தது. ஆகவே, செயற்திட்டத்தின் எதிர்பார்த்த குறைபாடு ரூபா 164.4 மில்லியன் ஏற்படும் வரை திட்டமிட்டவாறு அடைய முடியாதிருந்தது. | பாதகமான காலநிலை மற்றும் குழாயிடல் வேலைகள் நெல் அறுவடை பூர்த்தியாக்கும் வரை நிறுத்தி வைக்கப்பட்டமை என்பன காரணமான தாமதம் நிலவியது. | செயற்திட்ட காலத்தில் மூலப்பொருட்கள் கிடைத்திருக்குமாயின் முகாமைத்துவம் தேவையற்ற தாமதங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மத்திய சுற்றாடல் அபிவிருத்தி அதிகாரசபையால் செயற்திட்டத்திற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தும் 2024 மே 31 வரை ரூபா 180 மில்லியன் மதிப்பிட்பட்ட கிரயத்தில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்ட மாத்தறை மாவட்டத்தில் கோட்டாவிலவில் சுத்திகரிப்பு பொறிக்காக கொள்வனவு நடாத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை 2022 செப்தெம்பர் 01 இல் திட்டத்திற்காக மாத்தறை நகர சபையுடன் புரிந்துணர்வு விஞ்ஞாபனம் கைச்சாத்திட்டிருந்தது. | AF நிதிகளின் வரையறை காரணமாக கொட்டாவில சுத்திகரிப்பு பொறி நிர்மாண வேலைகள் கொள்வனவு நடைமுறை தொடர முடியாதிருந்தது. | வேலைகளின் தேவையற்ற தாமதங்களை தவிர்ப்பதற்கு செயற்திட்டத்திற்காக நிதிகள் கிடைத்தமையை உறுதிப்படுத்த வேண்டும். |